DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 205/2020 PW : 1

Name : சம்பத்ராஜ் Age – 64

S/o : லாபுலால் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 06.03.2026

**<u>1, 2, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளனோ என்றால் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். என் தம்பி, தங்கை மற்றும என் தாயார் பிரதிவாதிகளாக வழக்கில் சேர்த்துள்ளேன் என் தாயார் தற்போது இறந்துவிட்டார். பிரதிவாதிகளுக்கு பாகம் பிரிப்பதில் விருப்பம் இல்லை என்று சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது அவர்களுக்கு தான் தெரியும். என்னுடைய சகோதரிகளுக்கும் என் தாயாருக்கு பிரிப்பதற்கு சம்மதம் இருந்திருந்தால் அவர்களும் என்னுடன் சேர்ந்து வழக்கை தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் எங்களில் பெண்கள் யாரும் நீதிமன்றத்திற்கு வரமாட்டார்கள். என்னுடைய தந்தை ராஜஸ்தான் மாநிலத்திலிருந்து தான் இங்கு சுமார் 50, 60 ஆண்டுகளுக்கு முன் வந்தார். தாவா சொத்துக்கள் அவரடைய சுய சம்பாதியத்தில் வந்த சொத்துக்கள் ஆகும். அவர் அடகு வியாபாரம் செய்து வந்தார். அந்த கடையின் பெயர் லாபுலால் அடகு கடை என்று பெயரிடப்பட்டுள்ளது. தற்போது அந்த கடை என் பெயரில் மாற்றம் செய்யப்பட்டு நான் தான் நடத்தி வருகிறேன். என்னுடைய முதல் தம்பி 1ம் பிரதிவாதி துணி கடை வைத்து நடத்தி வருகிறார். மற்றொரு தம்பி 2ம் பிரதிவாதி சேலத்தில் நகை கடை வைத்துள்ளார். அவர் 2018ம் ஆண்டு இங்கு வந்து விட்டார்.

2) என் அப்பா 15.11.2018–ல் காலமானார் என்றால் சரிதான். எந்த அப்பா

உடல் நலம் சரியில்லாமல் இருந்த சமயத்தில் தான் 2ம் பிரதிவாதியான 2ம் தம்பி திரும்ப வந்தார். என் தந்தை தாவா சொத்தில் தான் காலமானார். தற்போது 513, CTH சாலை லட்சுமிபுரத்தில் வசித்து வருகிறேன். இங்கு வந்து என் தந்தை அவர் சம்பாதித்து தாவா சொத்தை மட்டும் கிரையம் வாங்கினார். ராஜஸ்தானில் அவருக்கு ஒரு வீடு மற்றும் நிலம் உள்ளது. இங்கு எதுவும் இல்லை. ராஜஸ்தானில் உள்ள வீட்டிற்கு எந்த வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை. எனக்கும் 1ம் பிரதிவாதியான மொதிலால்–ன் மகன் என்னை அடித்துவிட்டதால் அவர் மீது ஒரு குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது. நாங்கள் உட்கார்த்து பேசிக்கொண்டிருக்கும் போது அவர் அடித்துவிட்டார். எனக்கும் என் தம்பிக்கும் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக சண்டை நடந்தது என்றால் சரியல்ல. என்னுடைய புகாரில் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக எங்களுக்குள் தகராறு என்று சொல்லிவிட்டு துற்போது வழக்கிற்காக மாற்றி சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) பாகப்பிரிவினைக்காக நாங்கள் ஒரு முறை பேச்சு வார்த்தை நடத்தினோம். பஜரில் உள்ள நபர்கள் பேசுவதற்கு வந்தர்கள் குறிப்பிட்டு அவர்களின் பெயர் சொல்ல இயலாது. வழக்கு தாக்ல செய்துவதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு எந்த வித வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்துள்ளேனா என்றால் படித்து பார்த்தேன் அவர் தன்னுடைய இடம் என்று குறிப்பிட்டுள்ளார். பதிலுரையில் கூர் சீட்டு பற்றி குறிப்பிட்டுள்ளார் என்றாலும் அது சம்மந்தமாக நான் எந்த வித மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றால் என் தந்தை எந்த வித பாகப்பிரிவினை செய்யவில்லை அவர் உயில் எழுதிவைக்கவில்லை. ராஜஸ்தானில் உள்ள சொத்தை நாங்கள் அனைவரும் ஒன்றாக தான் அனுபவித்து வருகிறோம். ராஜஸ்தானில் உள்ள நிலத்தில் தனித்தனியாக வீடு எதுவும் கட்டவில்லை. என் தந்தையின் அடகு கடை வியாபாரத்தில் நானும் உதவியாக இருந்தேன். என் தந்தையின் அடகு கடை எல்லாருக்கும் பாத்தியப்பட்டது என்றால் என் தந்தை அடகு கடை எனக்கும், துணி கடை 1ம்

பிரதிவாதிக்கும், சேலத்தில் உள்ள கடை 2ம் பிரதிவாதிக்கு என சொல்லியுள்ளார். கதவு எண்.224-ல் அடகு கடை உள்ளது. 226-ல் வீடு உள்ளது. அதன் மத்தியில் 5 அடி சந்து நிலம் உள்ளது அதன் பக்கத்தில் மொதிலால் துணி கடை மற்றும் ஆனந்த் டெக்டைல்ஸ் உள்ளது. சுமார் 2011ம் ஆண்டே எந்த எந்த கடை யார் யாருக்கு என சொன்னார். இந்த சங்கதிகளை என் தாவாவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தற்போது தாவா சொத்தில் குடியில்லை. 2018, ஆகஸ்ட் 1ம் தேதி முதல் வாடகை வீட்டில் இருக்கிறேன். என் தந்தை இறக்கும் முன்பே நான் வாடகை வீட்டிற்கு சென்றுவிட்டேன். 2ம் பிரதிவாதி அங்கு குடியிருக்கவேண்டி என்னை அவர் அனுப்பிவிட்டார்.

**1, 2, 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்றிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை செய்ய ஒத்திவைக்கபடுகிறது.**

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.